# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1950/47 - 2016 ජනවාරි මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.01.21

*1950/47 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

*1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க மாகாணசபைகள் (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 32 (2அ) உப வாசகத்தின் கீழ் மேல் மாகாண சபை அரச சேவையின் அதிகாரங்கள் கையளிக்கப்படல் தொடர்பான ஆணை*

*1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க மாகாணசபைகள் (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் படி மேல் மாகாணத்தின் ஆளுநராக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1859/32 மற்றும் 2014.04.24 ஆந் திகதியிலான அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஆணையின்படி மேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு சபைக்கு அளித்த மேல் மாகாண சபை அரச சேவைகளுக்கு ஏற்புடைய நியமனங்கள், இடமாற்றங்கள், பதவியிலிருந்து நீக்குதல் அல்லது பணி நீக்கம் அவர்களின் ஒழுக்கக் கட்டுப்பாடு தொடர்பான அதிகாரங்களுக்கிடையே இதனோடு இணைக்கப்பட்டுள்ள இலக்கம் 01 முதல் 7 வரையான அட்டவணைகளில் ஒவ்வொரு அட்டவணையின் கீழும் காட்டப்பட்டுள்ள அளவுக்குரிய அதிகாரங்கள் 1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க மாகாண சபைகள் (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 32 (2அ) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கேற்ப இங்கு மேற்குறிப்பிட்ட அட்டவணைகளில் II ஆம் நிரலில் உறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள நியமனம், இடமாற்றம், பணிநீக்கம் மற்றும் அவர்களின் நன்னடத்தைக் கட்டுப்பாடு தொடர்பான அதிகாரங்கள் அந்த அட்டவணைகளில் I ஆம் நிரலில் உறுதியாகக் காட்டப்பட்டுள்ள அதிகாரிகளுக்கு வழங்கப்படும்.*

*அவ்வாறான போதும், மேல் மாகாண அரசசேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட இவ் அதிகாரக் கையளிப்பு தொடர்பில் அல்லது குறிப்பிட்ட அதிகாரங்களைச் செயற்படுத்தல் தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் தோன்றும் சந்தர்ப்பத்தில், மேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் தீர்வு இறுதித் தீர்வாகவும் தீர்மானமிக்கதாகவும் இருக்க வேண்டும். மேல் மாகாண சபைகள் அரச சேவைகள் ஆணைக்குழுவினால் மாகாணத்தின் முதலமைச்சருக்குஅல்லது யாரேனும் ஒரு அதிகாரிக்கு இத்தால் கையளிக்கப்படும் அதிகாரங்களை செயற்படுத்தும் போது அந்த அதிகாரியினால் எடுக்கப்படும் அனைத்து முடிவுகளும் 1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க மாகாண சபைகள் (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள்சட்டத்தின் 32 (2அ) மற்றும் 32(2ஆ) பிரிவுகளின் ஏற்பாடுகளின் கீழ் செயற்படுத்தப்பட வேண்டும் என குறிப்பிட்ட ஆணைக்கு இத்தால் ஆணையிடுகின்றது.*

*மேற்குறிப்பிட்ட அதிகாரங்கள் மேல் மாகாண சபையின்அரச சேவையிலுள்ள யாரேனும் ஒரு அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ள போதும், அந்த அதிகாரிகளால் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் செயற்படுத்தப்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 32(3) ஆம் பிரிவிற்கேற்ப மேல் மாகாண ஆளுநரால் தயாரிக்கப்பட்ட மேல் மாகாண அரச சேவைகள் பதவிகளை நியமித்தல், இடமாற்றம் செய்தல், பதவியுயர்வு தொடர்பான மேல் மாகாணஅரச சேவைகள் செயற்பாட்டு நடைமுறை விதிக் கோவையைப் போன்றே தாபனக் கோவை, மேல் மாகாண ஆளுநர் மற்றும் மேல் மாகாண அரச சேவைகள்ஆணைக்குழுவினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும் ஏதேனும் நிபந்தனைகள், விதிகள், ஆணைகள் மற்றும் வேறு நடைமுறை ஒழுங்குகளுக்கு ஏற்ப செயற்பட வேண்டும் என குறிப்பிட்ட ஆணைக்குழுவினால் இத்தால் உறுதியாக ஆணையிடப்படுகிறது.*

மேலும், மேற்குறிப்பிட்டவாறு வழங்கப்படும் அதிகாரங்களை ஓரவைப்படுத்தும்போது அதிருப்தியடையும் தரப்புக்கு மேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழுவிடம் மேன்முறையீடு செய்வதற்கான உரிமை உள்ளது. மேலும் இலக்கம் 01 முதல் 07 வரையான அட்டவணைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமான இலங்கைச் சனநாயக சோலிசக் குடியரசின் இலக்கம் 1859/32 மற்றும் 2014.04.24 ஆந் திகதியலமைந்த அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் ஆணைகளுக்கேற்ப மேல் மாகாண ஆளுநரால் மேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்ட ஏனைய அதிகாரங்கள் மேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழுவினால் செயற்படுத்தப்படும் எனவும் இத்தால் அறிவிக்கிறேன்.

2015.12.01 ஆந் திகதியன்றுள்ளவாறான மேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழு தீர்வின்படி இந்தஅதிகாரங்களை கையளித்தல் 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதலாம் திகதி முதல் செயற்படுத்தப்பட வேண்டும் எனவும், முன்னர் மேற்கொள்ளப்பட்ட அதிகாரக் கையளிப்பு, அதன் கீழ் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்பட்டுள்ளது என கருதப்படும் ஏதேனும் செயற்பாட்டுக்கு பங்கம் நேராதபடி செயற்படுத்துவதாக உறுதி செய்வதாகவும் மேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழுவினால் இத்தால் உறுதியாக ஆணையிடப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட அட்டவணைகள் இணைப்புகளாக முன்வைக்கப்பட்டுள்ளன.

சரத் குணதிலக்க,
தலைவர்,
மாகாண அரச சேவைகள்ஆணைக்குழு,
மேல் மாகாணம்.

மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
மேல் மாகாணம்
இல. 109, மஹ வீதி,
பத்தரமுல்ல.
2015, நவெம்பர் 23.

**அட்டவணை இலக்கம் 1**

| நிரல் I<br>அதிகாரமளிக்கப்பட்ட பதவிகள் | நிரல் II<br>உத்தியோகத்தர்களின் பிரிவு | நிரல் III<br>அளிக்கப்பட்ட அதிகாரங்கள் |
|---|---|---|
| 1. பொதுச் செயலாளர் | (I) நாடளாவிய சேவைகளுக்குரிய உத்தியோகத்தர்கள் | (அ) மேல் மாகாணத்தில் அமைச்சுக்கள், திணைக் களங்கள் மற்றும் நிறுவனங்களின் பதவிகளுக்கு நியமித்தல் மற்றும் உரிய முறையில் நிலைநிறுத் தல் |
| | (II) நாடளாவிய சேவைகளுக்குரிய உத்தி யோகத்தர்கள் (கல்வி நிருவாக சேவை தவிர்ந்த) | (அ) ஒழுக்கக் கட்டுப்பாடு (அரச சேவைகள் ஆணைக் குழுவின் ஒழுங்கு விதிகளுக்குக் கீழமைந்த |
| | (III) மேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழு நியமன அதிகாரியான<br>(i) SL சம்பளத் தொகுதியை உடைய உத்தி யோகத்தர்கள் (உள்ளூராட்சி நிறுவனங்க ளோடு மட்டுப்படுத்தப்பட்ட SL சம்பளத் தொகுதியை உடைய உத்தியோகத்தர்கள் தவிர்ந்த) | (அ) அமைச்சுகள்/திணைக்களங்கள்/நிறுவனங்க ளுக்கிடையே இடமாற்றம் செய்தல்<br>(ஆ) பணியிலிருந்து நீக்குதல் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு |
| | (IV) மேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழு நியமன அதிகாரியான | |

**அட்டவணை இலக்கம் 1** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* <br> *அதிகாரமளிக்கப்பட்ட பதவிகள்* | *நிரல் II* <br> *உத்தியோகத்தர்களின் பிரிவு* | *நிரல் III* <br> *அளிக்கப்பட்ட அதிகாரங்கள்* |
|---|---|---|
| | (i) SL சம்பளத் தொகுதியை சாராத உத்தியோகத்தர்கள் | (அ) பொதுச் செயலாளர் அலுவலகம் மற்றும் பொதுச் செயலாளர் அலுவலகத்துடன் இணைந்த நிறுவனங்களுக்கிடையே இடமாற்றங்களை மேற்கொள்ளுதல் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு. <br> (ஆ) அமைச்சுகள்/திணைக்களங்கள்/நிறுவனங்களுக்கிடையே இடமாற்றம் செய்தல் |
| | (V) MT-T, MN-1 PL சம்பள தொகுதியை உடைய பதவி வகிப்போர் <br> (i) SL சம்பளத் தொகுதியை சாராத உத்தியோகத்தர்கள் | (அ) மேல் மாகாண பொதுச் செயலாளர் அலுவலகம் மற்றும் பொதுச் செயலாளர் அலுவலகத்துடன் இணைந்த நிறுவனங்களில் பதவிகளுக்கு நியமித்தல், நிறுவன செயற்பாடுகள் மற்றும் இடமாற்றங்களை மேற்கொள்ளல், பணி நீக்கம் செய்தல் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு. <br> (ஆ) உள்ளூராட்சி நிறுவனங்கள் தவிர்ந்த அமைச்சுகள்/திணைக்களங்களுக்கிடையே இடமாற்றங்களை மேற்கொள்ளல் <br> (இ) கனிஷ்ட ஊழியர்களை மாகாணங்களுக்கிடையே ஒதுக்கீடு செய்தல்/விடுவித்தல் தொடர்பான நடவடிக்கை எடுத்தல் |

**குறிப்பு** :

* ''அரச சேவைகள் ஆணைக்குழுவின் ஒழுங்குகளின் கீழ்'' என்பது அரச சேவைகள் ஆணைக்குழுவினால் ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் விதிக்கப்படக்கூடிய ஒழுங்குவிதிகளின் கீழ் செயற்படுதல் எனப் பொருளைக் கொண்டிருக்கும்.

**அட்டவணை இலக்கம் 2**

| *நிரல் I* <br> *அதிகாரமளிக்கப்பட்ட பதவிகள்* | *நிரல் II* <br> *உத்தியோகத்தர்களின் பிரிவு* | *நிரல் III* <br> *அளிக்கப்பட்ட அதிகாரங்கள்* |
|---|---|---|
| 1. ஆளுநரின் செயலாளர் <br> 2. மாகாண சபைகள் அரச சேவைகள் ஆணைக்குழுச் செயலாளர் <br> 3. மாகாண சபைச் செயலாளர் | (I) மேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழு நியமன அதிகாரியான உத்தியோகத்தர்கள் | (அ) தனது அலுவலக உத்தியோகத்தர்களது பணி நீக்கம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு |
| | (II) MT-1, MN-1 மற்றும் PL சம்பள தொகுதியை உடைய பதவி வகிப்போர் | (அ) தமது அலுவலகப் பதவிகளுக்கு நியமித்தல் மற்றும் நிறுவன நடவடிக்கைகள் <br> (ஆ) பணி நீக்கம் செய்தல் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு |

**அட்டவணை இலக்கம் 3**

| *நிரல் I*<br>*அதிகாரமளிக்கப்பட்ட பதவிகள்* | *நிரல் II*<br>*உத்தியோகத்தர்களின் பிரிவு* | *நிரல் III*<br>*அளிக்கப்பட்ட அதிகாரங்கள்* |
|---|---|---|
| 1. அனைத்து அமைச்சுச் செயலாளர்கள் | (I) மேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழு நியமன அதிகாரியான உத்தியோகத்தர்கள் | (அ) தமது அமைச்சினதும் திணைக்களங்களினதும் உத்தியோகத்தர்களை தமது அமைச்சு மற்றும் அமைச்சுக்குரிய திணைக்களங்களுக்கு இடையே இடமாற்றம் செய்தல்<br>(ஆ) தமது அமைச்சு மற்றும் அமைச்சுக்குரிய திணைக்களங்களின் உத்தியோகத்தர்களது பணி நீக்கம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு (SL சம்பள தொகுதி தவிர்ந்த) |
| | (II) MT-1 மற்றும் MN-1 சம்பள தொகுதியை உடைய பதவி வகிப்போர் | (அ) தமது அமைச்சிலும் திணைக்களங்களிலும் பதவிகளில் நியமித்தல், இடமாற்றம் செய்தல் மற்றும் நிறுவனச் செயற்பாடுகள்<br>(ஆ) பணி நீக்கம் செய்தல் மற்றும் ஒழுக்கக் கட்டுப் பாடு |
| | (III) PL சம்பள தொகுதியை உடைய பதவி வகிப்போர் | (அ) தமது அமைச்சிலும் திணைக்களங்களிலும் பதவிகளில் நியமித்தல், இடமாற்றம் செய்தல்<br>(ஆ) நிறுவன நடவடிக்கைகள், பணி நீக்கம் செய்தல் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு (கல்வி சுகாதார மற்றும் ஆயுர்வேத திணைக்களங்கள் தவிர்ந்த) |

**குறிப்பு** : மேற்படி அதிகாரங்கள் தவிர கல்வி விடய அட்டவணை இலக்கம் 4, உள்ளூராட்சி விடய அட்டவணை இலக்கம் 5, சுகாதார விடய அட்டவணை இலக்கம் 7 ஆகியன ஏற்புடையன.

**அட்டவணை இலக்கம் 4**

| *நிரல் I*<br>*அதிகாரமளிக்கப்பட்ட பதவிகள்* | *நிரல் II*<br>*உத்தியோகத்தர்களின் பிரிவு* | *நிரல் III*<br>*அளிக்கப்பட்ட அதிகாரங்கள்* |
|---|---|---|
| 1. மாகாணக் கல்விச் செயலாளர் (மேற்படி அட்டவணை 3 இன் அதிகாரங் களுக்கு மேலதிகமாக) | (I) இலங்கை கல்வி நிருவாக சேவை | (அ) பணி நீக்கம் செய்தல் மற்றும் ஒழுக்கக் கட்டுப் பாடு (அரச சேவைகள் ஆணைக்குழுவின் ஒழுங்குகளின் கீழ்) |
| | (II) இலங்கை பாடசாலை அதிபர்கள் சேவை | (அ) பதவிகளில் நியமித்தல் மற்றும் நிலைப்படுத்தல்<br>(ஆ) பணி நீக்கம் செய்தல் மற்றும் ஒழுக்கக் கட்டுப் பாடு |
| 2. மாகாண கல்விப் பணிப்பாளர் | (I) மேல் மாகாண அரச ஆசிரியர் சேவை<br>(II) MN-1 மற்றும் PL சம்பள தொகுதியை உடைய பதவி வகிப்போர் | (அ) வலயங்களுக்கிடையே இடமாற்றம் செய்தல்<br>(ஆ) பணி நீக்கம் செய்தல் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு |
| 3. மாகாண கல்விப் பணிப்பாளர் | (I) மேல் மாகாண அரச ஆசிரியர் சேவை | (அ) வலயங்களுக்கிடையே இடமாற்றம் செய்தல்<br>(ஆ) பணி நீக்கம் செய்தல் மற்றும் ஒழுக்கக் கட்டுப் பாடு |
| | (II) PL சம்பளத் தொகுதியை உடைய பதவி வகிப்போர் | (அ) வலயங்களுக்கிடையே இடமாற்றம் செய்தல் |

**குறிப்பு** : "அரச சேவைகள் ஆணைக்குழுவின் ஒழுங்குகளின் கீழ்" என்பது அரச சேவைகள் ஆணைக்குழுவினால் ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் விதிக்கப்படக் கூடிய ஒழுங்கு விதிகளின் கீழ் செயற்படுதல் எனப் பொருளைக் கொண்டிருக்கும்.

**அட்டவணை இலக்கம் 5**

| நிரல் I<br>அதிகாரமளிக்கப்பட்ட பதவிகள் | நிரல் II<br>உத்தியோகத்தர்களின் பிரிவு | நிரல் III<br>அளிக்கப்பட்ட அதிகாரங்கள் |
|---|---|---|
| 1. உள்ளூராட்சி செயலாளர் (மேற்படி அட்டவணை 3 இன் அதிகாரங்களுக்கு மேலதிகமாக) | (I) மேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழு நியமன அதிகாரியான உள்ளூராட்சி நிறுவனங்களின் SL சம்பளத் தொகுதியை உடைய உத்தியோகத்தர்கள் | (அ) பணி நீக்கம் செய்தல் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு |
| | (II) மேல் மாகாண சபை அரச முகாமைத்துவ உயர் வகுப்பு உதவி உத்தியோகத்தர்கள் | (அ) பிரதேச சபை செயலாளர் பதவிக்கு நியமித்தல்<br>(ஆ) உள்ளூராட்சி நிறுவனங்களில் நிருவாக உத்தியோகத்தர் பதவிக்கு நியமித்தல் மற்றும் இடமாற்றம் செய்தல்<br>(இ) பணி நீக்கம் செய்தல் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு |
| | (III) மேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழு நியமன அதிகாரியான உள்ளூராட்சி நிறுவனங்களில் MN-7 சம்பள தொகுதியை உடைய உத்தியோகத்தர்கள் | (அ) பணி நீக்கம் செய்தல் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு |
| 2. உள்ளூராட்சி ஆணையாளர் (பொதுச் செயலாளர் மற்றும் உள்ளூராட்சி செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமாக) | (I) மேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழு நியமன அதிகாரியான பதவிகளில் உள்ள உத்தியோகத்தர்கள் | உள்ளூராட்சி நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள்<br>(அ) திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையே இடமாற்றம் செய்தல் |
| | (II) மேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழு நியமன அதிகாரியான பதவிகளிலுள்ள உத்தியோகத்தர்கள் (SL மற்றும் MN 7 சம்பள தொகுதி தவிர்ந்த) | (அ) பணி நீக்கம் செய்தல் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு |
| | (III) PL சம்பள தொகுதியை உடைய பதவி வகிப்போர் | (அ) பணி நீக்கம் செய்தல் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு |
| | (IV) உள்ளூராட்சி நிறுவனங்களில் உள்ளூராட்சி தலைவர் நியமன அதிகாரியான பதவி வகிப்போர் | (அ) விசேட ஏற்பாடுகள் இருக்கும்போது சேவையில் ஈடுபட்டுள்ள பதவி வகிப்போரினதும் ஏற்புடைய உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்களின் இணக்கத்தின் அடிப்படையில் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இணைத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளைத் திட்டமிடல் |

**அட்டவணை இலக்கம் 6**

| நிரல் I<br>அதிகாரமளிக்கப்பட்ட பதவிகள் | நிரல் II<br>உத்தியோகத்தர்களின் பிரிவு | நிரல் III<br>அளிக்கப்பட்ட அதிகாரங்கள் |
|---|---|---|
| 1. மாநகர ஆணையாளர்கள்<br>2. நகர சபைச் செயலாளர்கள்<br>3. பிரதேச சபைச் செயலாளர்கள் | (I) MT-3, RS-1, RS-2, MN-1 மற்றும் PL சம்பள தொகுதியை உடைய பதவி வகிப்போர் | உள்ளூராட்சி நிறுவன நிறைவேற்றுத் தலைவரின் விருப்பம் மற்றும் இணக்கத்தின் அடிப்படையில்<br>(அ) தமது நிறுவனத்தின் பதவிகளுக்கு நியமித்தல், அதிகார எல்லைக்குள் இடமாற்றம் செய்தல் மற்றும் நிறுவன நடவடிக்கைகள்<br>(ஆ) பணி நீக்கம் செய்தல் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு |

**அட்டவணை இலக்கம் 7**

| *நிரல் I*<br><br>*அதிகாரமளிக்கப்பட்ட பதவிகள்* | *நிரல் II*<br><br>*உத்தியோகத்தர்களின் பிரிவு* | *நிரல் III*<br><br>*அளிக்கப்பட்ட அதிகாரங்கள்* |
|---|---|---|
| 1. மாகாண சுகாதார செயலாளர்<br><br>(மேற்படி அட்டவணை 3 இன் அதிகாரங்களுக்கு மேலதிகமாக) | (I) மேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழு நியமன அதிகாரியான<br><br>(i) MP சம்பளத் தொகுதியை உடைய உத்தியோகத்தர்கள் | (அ) மாகாணத்தினுள் இடமாற்றம் செய்தல்<br><br>(ஆ) பணி நீக்கம் செய்தல் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு |
| 2. மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் | (I) மேல் மாகாண சபைஅரச சேவைகள் ஆணைக்குழு நியமன அதிகாரியான பதவிகளில் உத்தியோகத்தர்கள்<br><br>(MP சம்பளத் தொகுதி தவிர்ந்த) | (அ) தமது திணைக்களத்துக்குள் இடமாற்றம் செய்தல்<br><br>(ஆ) சுகாதார/ஆயுர்வேத திணைக்களத்தின் சுகாதார சேவைக்குரிய ஆள்சேர்ப்பு வகுப்பு உத்தியோகத்தர்களது பணி நீக்கம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு. |
| 3. மாகாண ஆயுர்வேத ஆணையாளர் | (II) PL சம்பளத் தொகுதியை உடைய பதவி வகிப்போர் | (அ) திணைக்களத்தினுள் மாவட்டங்களுக்கிடையே இடமாற்றங்கள் மற்றும் நிறுவன நடவடிக்கைகள்<br><br>(ஆ) பணி நீக்கம் செய்தல் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு |
| 4. பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் | (I) PL சம்பளத் தொகுதியை உடைய பதவி வகிப்போர் | (அ) தமது மாவட்டத்தினுள் இடமாற்றம் செய்தல் |

*2-172*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.